75

ஸ்ரீ:

ஒப்பிலியப்பன் கோயில்

# தல புராணச் சுருக்கம்.

இஃது

ஸ்ரீவெங்கடாசலபதி சுவாமி தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பட்டது.

75
2-55

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1955
MADRAS

தொகுத்தெழுதியவர் :


ப. இராமநாத பிள்ளை,

"தமிழாசிரியர்" மன்னார்குடி.

1955 [விலை 4 அணா

Q2 : >6 · 21193 · 0
N55

111863



பூமிநாச்சியார்.        ஸ்ரீ ஸ்ரீனிவாசப்பெருமாள்.

ஸ்ரீ:

ஒப்பிலியப்பன் கோயில்

# தல புராணச் சுருக்கம்.

இஃது
ஸ்ரீவேங்கடாசலபதி சுவாமி தேவஸ்தானத்தாரால்
வெளியிடப்பட்டது.

தொகுத்தெழுதியவர்:
ப. இராமநாத பிள்ளை,
"தமிழாசிரியர்" மன்னார்குடி.

நாஷனல் பிரஸ், கும்பகோணம்,
1955

உ

ஸ்ரீ வேங்கடேசாய மங்களம்.

# முன்னுரை.

திருவுடைய பெரியீர்!

திருவுறை மார்பன் திருவிளையாடல் புரிந்து விளங்கும் திருநகரங்களிற் பல சோழ நாட்டில் உள்ளன. அவை களில் திருப்பதியை ஒப்பச் சிறந்து விளங்கும் தலங்களுள் (கும்பகோணத்தை) திருக்குடந்தையையடுத்து, காவிரிக்குத் தென் கரையில் உள்ள இந்த உப்பிலியப்பனென விளங்கும் ஒப்பிலியப்பன் கோயிலை யறியாதார் சிலரே.

அடியார்கள் விண்ணப்பத்தை நிறைவேற்றியருளும் கருணைமா முகிலாய்த் திருப்பதிக்குச் செய்த பிரார்த்தனையை இங்கு நிறைவேற்றிப் பெற்று அருள் செய்யும் உயர்ந்த தலமிதுவாகும்.

ஒப்பிலியப்பனாய், உள்ளவன் உப்பிலியப்பனுமாய், உப்பிலா அமுதை ஏற்று மகிழ்வது. "ஒப்புடன் முக மலர்ந்து உபசரித்துண்மைபேசி, உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதேயமுதமாகும்," என்ற பழமொழிப்படி சுவையை மட்டும் மதியாது அன்பர்கள் உள்ளன்பையே மதித்து ஏற்று அருள் செய்பவன் என்பதாலும் இவன் ஒப்பிலியப்பனானான்.

கருவிலே திருவுடைய நம்மாழ்வாரும் பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், என்னப்பன் திருவிண்ணகரப்பன் என ஐந்து வகையாகக் காட்சி பெற்றுத் திருவாய்மொழியருளியுள்ளார்.

திருமங்கை மன்னனும், பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் முறையே ஈடுபட்டு அகங்கரைந்துருகிய

பாசுரங்கள் என் போன்றவரையும் உருக்குமெனில் இவர் பெருமையை எப்படியுரைப்பது. இப்பணியைச் செய்ய ஊக்குவித்த தஞ்சை அறநிலையப் பாதுகாப்பு உதவிக் கமிஷனர் உயர்திரு. P. சுப்ரமண்யபிள்ளை B. A., B. L., அவர்கட்கு நன்றி.

அன்பின் காரணத்தால் என்னை இப்பணியில் ஈடுபடுத்திய மெய்யன்பர் உயர்திரு, கோயில் தருமகர்த்தாக்களுக்கும் மானேஜர் K. நடராஜய்யரவர்கட்கும் என் நன்றி என்றும் உரித்து.

ஒன்றாலும் தகுதியிலாத என்னையும் இப்பணியில் ஈடுபடுத்தியருளிய பெருமையாலும் ஒப்பிலியப்பன் எனத் தன்னை மெய்ப்பித்துத் தோன்றாத் துணையாய் விளங்கும் திருவிண்ணகரப்பன் திருவடிகளை வணங்கும்.

மன்னார்குடி, 6-—2—1955 } ப. இராமநாதன்.

ஸ்ரீ:

திருவேங்கடமுடையான் திருவடி சரணம்.

# ஒப்பிலியப்பன் கோயில் அமைப்பு.

---

நம்மாழ்வார்.

என்னப்பனெனக்காயிகுளாய் என்னைப் பெற்றவளாய்
பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்
மின்னப் பொன் மதில்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழலே.

நாடு: சோழநாடு, தஞ்சாவூர் ஜில்லா.

தாலூகா: கும்பகோணம்:

ஊர்: உப்பிலியப்பன் கோயில் - திருநாகேசுரம். ரயிலடியிலிருந்து தெற்கே சுமார் ஒரு மைலிலுள்ளது.

கும்பகோணம் - காரைக்கால் கற்சாலையில் (கும்பகோணத்திலிருந்து) கிழக்கே நான்கு மைல் தூரத்தில் உள்ளது.

ஆறு: தலத்துக்கு வடக்கே 3 மைலில் காவிரி ஆறு ஓடுகிறது.

சத்திரம்: தேவஸ்தானத்தைச் சேர்ந்தது இங்கே பிரார்த்தனைக் கல்யாணங்கள் நடைபெறும்.

தருமம்: கோயிலில் திருவனந்தல் காலத்தில் ஒருபடி தயிரன்னம் சந்நிதியில் விநியோகம். உச்சிக்காலத்தில். தினமும் மூன்றுபடி தயிரன்னம், சாயங்காலத்தில் - தினம் இரண்டுபடி தயிரன்னம்-தேசாந்திரிகட்கு அளிக்கப்படும்-

பிரதி சனிக்கிழமை தோறும் எள்ளன்னம் ஒருபடி காலை ஆராதனத்தில் விநியோகம் பிரதி திருவோணத்திலும் ஒரு மரக்கால் சர்க்கரைப் பொங்கலும இரண்டுபடி தயிரன்னமும் காலையில் விநியோகம்.

இதர ஆலயம்: இக்கோயிலுக்கு வடக்கே கூப்பிடு தூரத்தில் தேவாரம் பெற்ற திருநாகேசுரர் ஆலயம் விளங்கும் இது பெரிய புராணம் பாடிய சேக்கிழார் நாயனாரது ஆன்மார்த்த ஆலயம்.

திருக்கோயில்: ஊருக்குத்தெற்கே பெரிய நான்கு வீதிகளுக்கிடையில் கம்பீரமான ராஜகோபுரத்துடன் விளங்கும்.

தல விருட்சம்: துளசி.

1. தீர்த்தங்கள்: அஹோராத்ர புஷ்கரிணி. கோயில் முதற்பிரகாரத்தில் ஈசான்ய திக்கில் உள்ளது.

2. சார்ங்க தீர்த்தம்: கோயிலுக்குத் தென் மேற்கில் உள்ளது.

3. சூர்யதீர்த்தம்: ஷை சார்ங்க தீர்த்தத்தின் வடபுறத்தில் உள்ளது.

4. இந்திர தீர்த்தம்: கோயிலுக்கு வடகிழக்கில் உள்ளது.

5. பிர்ம்ம தீர்த்தம்: ஷை இந்திர தீர்த்தத்தின் தென்-புறத்தில் உள்ளது.

6. தட்சண கங்கை: கோயிலுக்குத்தெற்கில் ஓடும் நதி. (நாட்டான் வாய்க்கால் - நாட்டாறு என வழங்கும்)

7. தட்சண கோதாவரி: ஷை நதிக்குத் தென்புறத்தில் ஓடுகிறது (இது - கீர்த்திமானாறு என வழங்கும்.)


8. தட்சண யமுனை : ஷ நதிக்குத் தென்புறத்தில் ஓடும். (இது அரிசொல்லாறு - அரசலாறு என வழங்கும்)

மூலஸ்தானம்:—" சுத்தாநந்தம் " எனும் விமானத்தின்கீழ் ஒப்பிலியப்பன் கிழக்கு நோக்கி, நின்ற திருக்கோலமாய் கம்பீரமான தோற்றத்தோடும், நாச்சியார் பூமிதேவி என்னும் திருநாமத்துடன் வடக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலததுடனும் மார்க்கண்டேயர் தெற்கு நோக்கியும் அமர்ந்து கன்னிகாதானம் செய்யும் நிலையிலும் காட்சியளிப்பர்.

உற்சவர்: பெருமாள் - ஸ்ரீநிவாசன்.
தாயார் - பூமிதேவி.
சந்தானகிருஷ்ணன்.
என்னப்பன் - உபயநாச்சியார்.
மணியப்பன்.
சக்கரத்தாழ்வார்.
பட்சிராஜன்
விஷ்வக்ஸேனர்
கண்ணன்
வரதராஜன்.
ஸ்ரீராமன் - லட்சுமணன் - சீதை
ஹனுமார்.
தேசிகர்.
உடையவர்.

## வெள்ளிவாகனங்கள்

1. கருடவாகனம்.
2. சூர்யப்ரபை.
3. யானைவாகனம்.
4. சேஷவாகனம்.
5. அன்னவாகனம்.
6. குதிரைவாகனம்.
7. ஹனுமார்வாகனம்.



ஒப்பிலியப்பன்கோவில் ஆலய விமானத்தோற்றம்.

## தேசிகர் சந்நிதி

மூலவர் தெற்கு நோக்கிய சந்நிதி.

## உடையவர் சந்நிதி.

மூலவர் - மேற்கு நோக்கிய சந்நிதி.

## ஆழ்வார்கள்

1. குலசேகராழ்வார்.
2. பேயாழ்வார்.
3. தொண்டரடிப்பொடியாழ்வார்.
4. பெரியாழ்வார்.
5. நம்மாழ்வார்.
6. திருமங்கையாழ்வார்.

இவ்வாலயம் வடகலை சம்பிரதாயப்படி வைகாநஸ ஆகமப்படி நடைபெறுவது.

## உத்ஸவங்களின் விபரம்.

திருவோணம் : ஒவ்வொரு சிரவணத்திலும் தெரிசனம் விசேஷம்.

வைகாசி : திருவோணம் - வஸந்தோத்ஸவ சாத்துமுறை (முந்திய விசாகம் தொடங்கி (7) ஏழுநாள் உத்ஸவம்)

ஆவணி : திருவோணம் - பவித்ரோத்ஸவ சாத்துமுறை (முந்திய கேட்டை நட்சத்திரந் தொடங்கி (5) ஐந்து நாள் உத்ஸவம்.)

புரட்டாசி : திருவோணம் - பிர்ம்மோத்ஸவ சாத்துமுறை ரதம் ( முந்திய சித்திரை நட்சத்திரம் தொடங்கி (9) ஒன்பது நாள் உத்ஸவம் )

தேசிகர் உற்சவம்: தேசிகர் திருநட்சத்திரத்தில் 10-நாள்

ஐப்பசி : திருவோணம் – திருக்கல்யாண உத்ஸவம் (திருவோணம் முதல் (10) பத்துநாள் உத்ஸவம்

உபந்யாசங்கள், சங்கீதக் கச்சேரிகள் - கதா காலக்ஷேப ங்களுடன், அதி விமரிசையாய் நடைபெறும்)

மார்கழி : திருவத்யயனோத்ஸவம் (22) இருபத்திரண்டுநாள்)

தை : திருவோணம் - தெப்போத்ஸவம் - சாத்துமுறை (முந்திய கேட்டை நட்சத்திரம் தொடங்கி (5) ஐந்து நாள்) (இப்பொழுது நடைபெறவில்லை. பக்தர்கள் கைங்கர்யம எதிர்பார்க்கப்படுகிறது.)

பங்குனி : திருவோணம் - பிரம்மோத்ஸவம் (அவதார உத்ஸவம்) திருத்தேர் (முந்திய சித்திரை நட்சத்திரந் தொடங்கி (9) ஒன்பது நாள் உத்ஸவம்.

குறிப்பு:— உற்சவங்கள் யாவும் உபயக்காரர்களால் நடைபெறுகின்றன.

## அர்ச்சனை முதலானவைகட்கு ஏற்பட்டுள்ள கட்டண விபரம்.

| | | |
|---|---|---|
| அஷ்டோத்ரம் | ரூ ... | 0—3—0 |
| சஹஸ்ரநாமம் | ... | 1—0—0 |

## தேவஸ்தான கட்டணம்.

| | | |
|---|---|---|
| வார மாதாந்தர அஷ்டோத்ர அர்ச்சனை ஆ-1க்கு | | 3—0—0 |
| வார மாதாந்தர ஸகஸ்ரநாமார்ச்சனை ஆ-1க்கு | | 12—0—0 |
| லட்சார்ச்சனை ஒருவருஷத்திற்கு | ... | 25—0—0 |

அர்ச்சகர்கள் சம்பாவனை & தபால் செலவு தனி.
அர்ச்சனை செய்து பிரசாதமும் அனுப்பப்படும்

| | | |
|---|---|---|
| நித்யாராதனம் | ரூ ... | 11—0—0 |
| மூலவர் திருமஞ்சன அனுமதிசீட்டு | ... | 6—0—0 |
| உத்ஸவர் திருமஞ்சன அனுமதிச்சீட்டு | ... | 1—0—0 |
| முடி | ... | 2—0—0 |
| காதுகுத்த | ... | 1—6—0 |

| | |
|---|---|
| கல்யாணம் | ... 14—0—0 |
| புரோகிதம் | ... 6 0—0 |
| பூணூல் | ... 14—0—0 |
| ஸீமந்தம் | ... 14—0—0 |
| வளைகாப்பு | ... 5—0—0 |
| ஆயுஷ்ய ஹோமம் | ... 2—0—0 |

குறிப்பு:—கல்யாணம் செய்ய வரும் பிரார்த்தனைக்காரர்கட்கு - மின்சார விளக்குகளமைந்த வசதியுள்ள சத்திரம் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதற்குத் தேவஸ்தானக் கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ. 7—8—0 (மின்சாரச் செலவு தனி) மேலும்—இந்த ஒரு சத்திரம் மட்டும் போதாதிருப்பதால் மற்றொரு சத்திரமும் கட்ட ஏற்பாடாகியிருக்கிறபடியால் பக்த கோடிகள் தங்களால் இயன்ற வரை உதவி செய்து ஷை கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஸ்ரீ :

ஸ்ரீ பூமி நாச்சியார் திருவிண்ணகரப்பன் துணை.

# திருவிண்ணகர்ச் சிறப்பு.

[ப்ரஹ்மாண்ட புராணத்தில் பிர்ஹ்மதேவர்]

---

நாரதருக்கு உபதேசித்தது.

## திருத்துழாய்த்தேவியின் விண்ணப்பம்.

திருமால் திருப்பாற் கடலைக் கடையக் கட்டளையிட்டுத் தேவர்களும் அசுரர்களும் கடைந்த காலத்தில் உண்டான பல பொருள்களிலும் சிறந்த லட்சுமி தேவியைப்போலவே திருத்துழாய்த் தேவியும் (துளசியம்மன்) உதித்தருளினள். இவள் ஒருநாள் பெருமாளை நோக்கி "நாயகனே! தாங்கள் லட்சுமியை மட்டும் திருமார்பில் வீற்றிருக்கச் செய்தபடியால் அவள் அளவிலாப் பெருமையுடன் விளங்கவும், அவளுடன் தோன்றித் தங்களை நாயகனகப் பெற்ற என்னை மட்டும் கீழே வைத்தருளினீர்கள். என்னையும் அப்படியே திருமார்பில் வீற்றிருக்கச் செய்யவேணும்" என்று வேண்டிக்கொண்டாள்.

பெருமாளும் புன்னகை செய்து "தேவி! லட்சுமி கடுந்தவம் புரிந்து என் மார்பில் இடம் பெற்றாள். அவள் பூமியின் வடிவங்கொண்டு, மார்க்கண்டேயருக்குப் புதல்வியாய்ப் பிறப்பாள். அவளுக்குத் தக்க பருவம் வந்தவுடன் திருக்கல்யாணம் செய்யப் போகிறேன் அத்தலம் எல்லா உலகங்களிலும் சிறந்ததான பூவுலகத்தின் திருமுகம்போல் விளங்கும் சோழமண்டலத்தில், கங்கையிற் சிறந்ததான காவிரியின் தென்கரையில் விளங்கும். அங்கே மார்க்கண்டர் தவஞ்செய்வர். அங்கே நீ செடியுருவாய் தங்கியிருப்பாய், உன் அடியில் லட்சுமி அவதரிப்பாள், நான் மார்க்கண்டேயர் கோரியபடி திருமணம் செய்து அத்

தலத்திலேயே பிரியாமல் இருந்தருள் செய்வேன் அப்பொழுது உனக்குப் பலபெருமைகள் ஏற்படும். உன்னை மாலையாகத்தரிப்பேன். உன் இதழ்களால் என்னை அர்ச்சிப்பவன். செல்வம். ஆயுள் முதலான எல்லா நலமும பெறுவான். உன் வனத்தைத் தெரிசிப்பவர்கட்கோ - பூசிப்பவர்கட்கோ - உண்டாகும் பெருமைகளைக் கூறி முடியாது. உன் வனமும் (துளசி வனம்) திருத்துழாய்க் காடு எனப்பெயர் பெறும். விண்ணகத்துள்ள நான் உன்னோடும் அங்கு வசிப்பதால் அத்தலம் "விண்ணகரம்" எனவும் பெயர் பெற்று விளங்கும்." என்று திருவாய் மலர்ந்தருளினர்" துளசி தேவியும் மன மகிழ்ந்து வணங்கினள்.

## மார்க்கண்டேயர் தவம்.

மிருகண்டு முனிவரின் தவப்புதல்வரான மார்க்கண்டேயர் பல தீர்த்தங்களாடியும் பல தலங்களையும் தெரிசித்தும் இந்தத் தலத்துக்கு வந்தார். இது தவத்திற்குச் சிறந்த இடமெனக் கொண்டு தங்கினர். திருக்கோயிலுக்கருகிலுள்ள தீர்த்தத்தில் நீராடிக் கிழங்கை உணவாகக் கொண்டார் பெருமாளது திருவருளாலே இவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அதாவது பூமி தேவியைப் பெண்ணாய்ப் பெற்றுத் திருமாலை மாப்பிள்ளையாகவும் பெற வேண்டுமென்பதேயாம் உடனே தனதெண்ணம் நிறைவேறக் கடுந்தவம் புரிந்தார்.

## பிராட்டியும் பெருமாளும் திருவுளம்பற்றியது.

மார்க்கண்டேயரது தவத்திற்கிரங்கிய திருமால் லட்சுமி தேவியை நோக்கி "நீ பூவுலகம் சென்று திருவிண்ணகரிலுள்ள திருத்துழாய்ச் செடியினடியில் குழந்தையாய்க் கிடந்து மார்க்கண்டரால் வளர்க்கப் பெறுவாய் நாம் வந்து மணம் புரிந்து அங்கே பிரியாது வசிப்போம்" என்றருளினர்.

## பூமிதேவி அவதாரம்.

லட்சுமி தேவி குழந்தை வடிவினளாய், துளசிச் செடியின் அடியில் முழுமதியெனத் தோன்றக் கண்ட

மார்க்கண்டேயர் தவம் பலித்தது என மகிழ்ந்து குழந்தையை எடுத்து அளவிலா மகிழ்ச்சி பொங்க அதன் வரலாற்றை வினவ தெய்வக் குழந்தையும் "சுவாமி என்னையான் அறியேன். உம்மையே தந்தையாகப் பாவிக்கிறேன்" என்றருளியது. இதுவும் திருமால் திருவுள்ளம் என மகிழ்ந்து குழந்தைக்குப் "பூமிதேவி" எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்.

## மார்க்கண்டேயர் கவலையும் திருமாலருளும்

மார்க்கண்டேயரிடம் வளரும் பூமி தேவி மணப் பருவம் அடைந்தாள், முனிவரோ இவளுக்குத் தக்க கணவனை எங்கே தேடமுடியும் என்று பெருங் கவலை கொண்டார். திருமாலும் திருவுளமிரங்கி வயது முதிர்ந்த அந்தணனாக, நோயாளி போல மாய வேடம் பூண்டு மார்க்கண்டேயரிடம் வந்தார். அப்படி வந்தருளிய தினம் பங்குனி மாதம் ஏகாதசியும் திருவோண நட்சத்திரமுங் கூடிய நன்னாளாகும். மார்க்கண்டேயரும் வந்த பெரியவரை முறைப்படி வணங்கி வரவேற்று ஆதனத் திருத்தித் தண்டமிட்டு வரலாற்றைக் கேட்டார். முதிய-வரும், "ஏ முனிவரே! எனக்கு மனைவி மக்கள் ஒருவரும் இல்லை. சிறிது காலம் இல்லறத்திலிருந்து ஒரு புத்ரனைப் பெற்றாலல்லாமல் நற்கதியில்லை எனப் பெரியோர்கள் கூறுகின்றார்கள். ஆதலால் உன் பெண்ணை எனக்கு மணம் செய்வித்து என் கருத்தை நிறைவேற்றவேண்டும்" என்றார்.

மார்க்கண்டேயர் "சுவாமி! பெரியவரே! இவ்வளவு முதிய பருவத்தில் எனது சிறுமியை எப்படிக் கொடுப்பது?' நீங்கள் தான் என்ன நன்மை அடைய முடியும்? இப் பருவத்தில் இத்தகைய எண்ணத்தைக் கைவிடுவதே மேல்' என்று மறுமொழி கூறினர்.

மாயனான முதியவரோ "இத்தகைய உபதேசம் எனக்கு வேண்டாம். உமது பெண்ணை என் மனம் நாடுகிறது. தாம் கன்னிகாதானம் செய்யாவிடில் உயிர் விடுவேன். இப்பாவம் உம்மைச்சாரும்" என்றார்.

மார்க்கண்டேயர், சுவாமி! தமக்கு உற்ருர் உறவினரின்மையால் என் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் அவளே உணவு சமைத்துப் பரிமாறி உபசரிக்க வேண்டியது தலைசிறந்த கடமையாயிற்றே. இவள் உணவின் சுவைகூட அறியாதவள். சமையலில் உப்புச் சேர்த்துச் சுவைபட எப்படிச் சமைக்க முடியும். இதனால் உங்கட்குக் கோபம் வந்து தண்டிக்க நேரும். இதையறிந்து எனக்குங் கோபம் வரும். உம்மைச் சபிக்க நேருமே இதைக் காரணமாகக் கொண்டாவது இந்த எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்றும் மீண்டும் வேண்டினர். வந்த கிழவரோ ஒரே பிடிவாதமாய்த் தான் முதலில் கூறியதையே கூறினர். மார்க்கண்டேய முனிவரோ திருமாலைத் தியானித்துப் பலவாறு துதித்து இந்த ஆபத்தில் காப்பாற்றியருள வேண்டினர். அத்துடனும் இந்த சமயத்தில் தம் புதல்வியையும் கூப்பிட்டு "ஏ பெண்ணே! நீ இப்போது முனிவர் கூறுவதையறிவாய். அவரோ பிடிவாதமாய் உன்னை மணக்காவிட்டால் உயிர்விடுவேன் என்று கூறுகிருர் உன் கருத்தை யறிவிப்பாய்" என்ருர். மங்கை "ஐயோ! இக்கிழவனை மணப்பதைக்காட்டிலும் உயிர்விடுவேன்" என்ருள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவித்து மார்க்கண்டேயர் எம்பெருமானைத் தியானித்தார். திடீரென முதியவர் உருவமறைந்தது. உடனே திருமால் சங்கு சக்ர பீதாம்பரதாரியாய்க் காட்சியளித்தார். முனிவரும் மகளும் கண்ணாரக் கண்டு ஆடிப்பாடித் தொழுது துதித்தனர்.

### பெருமாள் அமுதில் உப்பின் கலப்பே வேண்டாமெனல்.

ஏ முனிவரே! உமது பக்திக்குக் கட்டுப்பட்டேன் உம் பெண்ணாக வந்த பூமிதேவியை எனக்கு மணஞ் செய்வித்து என்னை மணமகனைப் பெறுவீர் இதுதானே உமதெண்ணம். மேலும் உணவில்உப்பிடவும் அறியாதவள் என்று சொன்னபடி எனக்கு உப்பே வேண்டாம். உள்ளன்பே வேண்டும் அன்போடு கூடிய உபசாரமே அமுதமாம். எனக்கு அமுது செய்வித்தபிறகு அதை அன்புடன் உண்பார்க்கும் அதுவும் அமுதமாயிருக்கும் இத்தலத்தில் நான் உப்பிட்ட பண்டம் உண்ணேன் என்

ஸந்நிதியில் உப்பிட்டபண்டத்தைக்கொண்டு வருபவனும் என் கோபத்துக்கு ஆளாவான்" என்றருளினர்.

முனிவரும் மகளும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து மூன்றுவரம் கேட்டனர்! என் பெண்ணைத் தேவரீர் மணம் செய்தருளி நீங்கள் இவ்விடம் விட்டகலாது இருத்தல் வேண்டும். 2. இவ்வனம் "துளசி வனம்" எனப் பெயர் பெறவேண்டும் 3. உமக்கு அமுது செய்த உப்பிலாஉணவுமிகச்சுவையுடையதாய்அடியார்கட்குமாக வேண்டும் எமக்கும் முத்தியும் தந்தருளவேண்டும் என்றபடி பெருமாளும் திருவுளம் பற்றியருளினர்.

மேலும் மார்க்கண்டேயர் "சுவாமி இத் திருமணத்தைத் தேவரீரே நடத்தியருளவேணும் எப்போது நடத்துவீரோ என்பதையும் தெரிவித்தருளவேணும். என்றபடி ஐப்பசி மாதத்தில் நடைபெறும். நாமே ஆகவேண்டியவைகளுடன் வருவோம் கவலைப்படாதேயும்" என்று கூறியருளினர்.

பெருமாளும் கருடன் மூலம் பிரமனுக்குக் கட்டளையிட, அவரும் இந்திராதி தேவர்கட்கும் தெரிவித்தபடி பிரமதேவரும் இந்திராதி தேவர்களும் தத்தம் தேவிமாருடனும், காமதேனு கற்பக விருட்சத்துடனும் இத்தலத்திற்கு வந்து சேர்ந்தனர்.

## திருமணமும் திருக்கோயிலும்.

ஐப்பசி-மீ திருவோண நட்சத்திரத்தில் யாவருமறிய வேத முறைப்படித் திருமணம் நடைபெற்றது. பின்னர் யாவரும திருவருள் பெற்றுத் தமதிருப்பிடம் சேர்ந்தனர்.

பிறகு எம்பெருமான் கட்டளையிட்டபடி மயனும் திருக்கோயிலமைத்து "சுத்தாநந்த விமானம்" எனும் விமானமும் அமைத்தான்.

## பிரமோற்சவம்

பிரமதேவர்-இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் இத்தலத்திற்கு வந்து பலவாறு தொழுது திருவருள்

பெற்றனர். பிரமதேவர் பிரமோற்சவம் செய்ய விண்ணப்பிக்கப்பெருமாள் திருவுள்ளப்படி புரட்டாசி மாதத்தில் ஒன்பது நாள் திருவிழாக் கண்டருளி திருவோணத்தில் "அஹோராத்ர தீர்த்தத்தில் தீர்த்தவாரியுங்கண்டருளினார்கள்."


இக்காலத்திலும் புரட்டாசி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் பிரமதேவருள்ளிட்ட சர்வ தேவர்களும் உற்சவங்கண்டருளுகிறார்கள் என்பது ஐதிகம்.

## தீர்த்தச் சிறப்பு.

இவ்வாலயத்தின் வடபுறத்தில் "அஹோராத்ர புஷ்கரிணி" என்ற தீர்த்தம் ஒன்றுண்டு. இதன் வரலாறு:- முன்னொருகால் தேவசன்மா என்னும் அந்தணன் பரத்துவாச குலத்திற் பிறந்து வேதம் ஓதி வந்தனன். அவன் தீவினை வசத்தால் பூக்கொய்துகொண்டிருந்த ஜைமினி முனிவர் புதல்வியாகிய கன்னிகையைக் கற்பழித்தான். இதையறிந்த ஜைமினி முனிவர் அவனைக் கிரவுஞ்ச பட்சியாகச் சபித்தார். தன் குற்றத்தையுணர்ந்த அந்தணன் அவரைச் சரணடைந்து சாபவிமோசனம் வேண்டினன். மனமிரங்கிய முனிவர் "நீ மார்க்கண்ட க்ஷேத்ரம் சென்று அங்குள்ள தீர்த்தக் கரையில் உள்ள மரத்தில் தலைகீழாகத் தொங்குவாய் அக்கினி புயலில். அடிபட்டுப் பொய்கையில் விழும்போது சாபம் நீங்கும் என்றார். அப்போதே பறவையுருவான அந்தணர் இத்தலத்தில் வந்து அம்முனிவர் கூறியபடி தொங்கி நிற்க ஒருநாள் புயலில் கிளைமுறிந்து தீர்த்தத்தில் விழுந்த பறவையுருவம் நீங்கி தெய்வ விமானம் ஏறி வைகுந்தம்போனன். அந்த அந்தணன் அப்போது வருணனது ஏவலாளர்கள் வழிமறித்து இரவில் ஒருயாமத்திற்குப் பின் புண்ய தீர்த்தங்களில் நீராடினவர்களைத் தண்டிக்க வேண்டியது" எமது கடமை. அதனல் இவன் தண்டனைக்குரியவன் என்றனர். உடனே திருமால் தூதர்கள் "இத்தீர்த்தப் பெருமை உங்கட்குத் தெரியாது. இதில் ஐயமிருந்தால் உங்கள் தலைவனைக் கேட்டுத் தெளியுங்கள்" என்று கூறி அந்தணனை விமானத்தில் கொண்டு வைகுந்தம் சேர்ந்தனர்.

அன்று முதல், இத்தீர்த்தம் "அஹோராத்ரபுஷ்கரிணி எனப் பெயர்பெற்று விளங்கும். இதில் எந்த உயிர்களும் எப்போது நீராடினாலும் உயர்ந்த பலன் பெறும். விசேஷ நாட்களிலும் தான் பிறந்த நட்சத்திரத்திலும், பெருமாள் திருநட்சத்ரமாகிய திருவோணத்திலும் தீர்த்தமாடுவோர் நினைத்தவை கைகூடித் திருவிண்ணகரப்பன் திருவருளும் பெறுவர்.

இப்படியே, 1. சார்ங்க, 2. சூர்ய, 3. இந்திர 4, பிர்ம்ம 5, தெட்சண கங்கை 6, தெட்சண கோதாவரி 7, தெட்சண யமுனை ஆகிய எல்லாத் தீர்த்தங்களின் பெருமையைக்கூறி முடியாது.



திருக்குளமும் எட்டுக்கால் மண்டபமும்.

தணிக்கை செய்து ஒத்துக்கொள்ளப்பட்டது 1363 - பசலி

## சொத்து விபரம்.

| | ஏ. | செ. |
|---|---|---|
| நன்செய். | 43 | 66 |
| புன்செய். | 62 | 70 |

உப்பிலியப்பன்கோயில் கிராமத்திலுள்ள திருவீதி வீடுகள் யாவும் ஏகபோகம்.

### வரவு

| | கலம். | மரா. | ப. | ரூபா. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு ... | 259 | 3 | 2 | 6498 | 2 | 8 |
| நெல் (நன்செய்) ... | 1040 | 6 | 1 | | | |
| புன்செய்யும் மனைப்பகுதியும் ... | | | | 1588 | 14 | 0 |
| கட்டட வாடகை ... | | | | 688 | 1 | 6 |
| காணிக்கை கட்டளை உபயம் நெல் ... | 16 | 0 | 0 | 7128 | 1 | 4 |
| மூலதனம் ... | | | | 3027 | 0 | 0 |
| வட்டி ... | | | | 404 | 2 | 3 |
| கடன் வரவு ... | | | | 721 | 4 | 6 |
| ஷை நெல் ... | 20 | 0 | 0 | | | |
| சில்லறை வரவு ... | | | | 7655 | 1 | 6 |
| உண்டியல் ... | | | | 2045 | 12 | 0 |
| கால் நடை விற்று வரவு. ... | | | | 56 | 8 | 0 |
| ஆக. ... | 1335 | 9 | 3 | 29,812 | 15 | 9 |

# 1363ம் - பசலி செலவு

| | கலம். | மர. | ப. | ரூபா. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஆபீஸ் செலவு ... | | | | 2864 | 0 | 6 |
| கோவில் பூஜை ... | 602 | 11 | 2 | 3296 | 5 | 8 |
| உற்சவச் செலவு ... | 10 | 10 | 0 | 3340 | 9 | 0 |
| கட்டளைகள் ... | 16 | 0 | 0 | | | |
| மராமத்து ... | | | | 158 | 10 | 0 |
| கட்டிடம் ரிபேர் செலவு ... | | | | 572 | 13 | 9 |
| வரிகள் ... | | | | 1285 | 10 | 2 |
| வாகனங்கள் ரிபேர் செலவு ... | | | | 244 | 14 | 6 |
| நகைகள் ரிபேர் செலவு ... | | | | 17 | 8 | 6 |
| கால் நடை பராமரிப்பு ... | | | | 87 | 7 | 0 |
| சுகாதாரச் செலவு ... | | | | 39 | 9 | 6 |
| போர்டு கண்டிரிபியூஷன் & ஆடிட் செலவு | | | | 710 | 0 | 0 |
| கோர்ட்டு செலவு ... | | | | 385 | 1 | 0 |
| சில்லறைச் செலவு ... | | | | 616 | 8 | 0 |
| கடன் கொடுத்தது ... | 20 | 0 | 0 | | | |
| பேர்வழிகள் கணக்கு .. | | | | 3880 | 5 | 6 |
| ரிஸர்வ் நிதிக்கு திரும்பப் போடப்பட்டது | | | | 3976 | 14 | 0 |
| நெல் விற்றுமுதல் ... | 505 | 11 | 0 | | | |
| இருப்பு ... | 180 | 1 | 1 | 8336 | 10 | 8 |
| மொத்தம் ... | 1335 | 9 | 3 | 29,812 | 15 | 9 |

111863
15

ஜ2:54.2119 N55



இத்தலத்தில் பெருமாள் நிலையாகப் பிராட்டியுட னிருந்து திருமணக் கோலமாய் சேவை சாதித்தருளுவதால் இக்கலியுகத்திலும் அடியார்களது பிரார்த்தனைகளை நிறைவேற்றி வருவதை அன்பர்களே அறிவர்.

கருவிலே திருவுடையார் யாவரும் திருவிண்ணகரப் பனைச் சிந்தித்தும், பாடியும் தொழுதும், பூசித்தும், பூசிக்கச் செய்தும் எல்லா நலங்களையும் பெற்று வாழ்வார்களாக. கோயிலில் இருக்கும் அஹோராத்ர புஷ்கரிணிக்கு, வாய்கால், வடிகால், இல்லை இதற்குமின்சார யந்திர வசதியால் பாயவும் வடியவும் வருடந்தோறும் செய்ய வேண்டியிருப்பதால் அன்பர்கள் யாவரும் இயன்றளவு பொருளுதவி செய்ய வேண்டுகிறோம்.

### நந்தவனம்

கோயிலுக்குத் தென்கரையில் உள்ளது கோயமுத்தூர் வேதாந்த ராமானுஜதாஸ், ரெங்கராமானுஜதாஸ் இவர்களது பெருமுயற்சியால் விசேஷ புஷ்ப கைங்கர்யம் தினந்தோறும் திருமாலைகட்டி திருவாராதன காலந் தோறும் தவறாது நடைபெற்று வருகிறது குறிப்பிடத் தக்கது. ரெத்னகிரீடம் செய்யத தற்போது சுமார் (2000) இரண்டாயிரம் வரை நிதி சேர்க்கப்பட்டிருக்கிறது. பக்தர்கள் மேலும் பொருளுதவி கைங்கர்யத்தை நிறை வேற்றி வைக்கக் கோரப்படுகிறது. இதற்கான ரத்னக் கற்களில் சிலவும் வைரக் கற்களும் கொஞ்சம் கைவசம் இருக்கிறது.

முந்திய நூல்கள்:—

1. வட மொழியில் ஒரு புராணம் உண்டு.

2. திருவிண்ணகர்த்தல மான்மியம் என்றொரு நூல் ஷை வடமொழியிலுள்ளதை மொழி பெயர்த்து இச் சந்நிதி வித்வான் — சிரோமணி வித்யா விசாரத ஸ்ரீ உ. வே வங்கீபுரம், நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்ய சுவாமிகளால் பதிக்கப்பெற்றது.

இத்தலம் சென்னை இந்து மத பரிபாலன போர்டார் ஆட்சிக்குட்பட்டது. போர்ட்டு ஸ்கீம்படி நிர்வாகம் நடத்தப்படுகிறது.

*தர்மகர்த்தாக்கள்:—*

N. ராஜகோபாலன்
சேர்மன் Board of Trustee.

K. நடராஜன்,
மானேஜர்.

N. S. ராகவய்யங்கார் - டிரஸ்டி.

A. சாமிநாத பிள்ளை - டிரஸ்டி.

ஸ்ரீ:

ஆழ்வார்திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

திருமங்கைமன்னன் அருளிச்செய்த

# பெரிய திருமொழி ஆறும்பத்து முதல்திருமொழி

வண்டுணுநறுமலரிண்டைகொண்டு
பண்டைநம்வினைகெடவென்று அடிமேல்
தொண்டருமமரரும் பணியநின்று, அங்கு
அண்டமொடகலிடமளந்தவனே!
ஆண்டாய்! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே!

அண்ணல்செய்து அலைகடல்கடந்து, அதனுள்
கண்ணுதல்நஞ்சுண்ணக்கண்டவனே!
விண்ணவரமுதுண அமுதில்வரும்
பெண்ணமுதுண்டஎம்பெருமானே!
ஆண்டாய்! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே!

குழல்நிறவண்ண! நின்கூறுகொண்ட
தழல்நிறவண்ணன்நண்ணார்நகரம்
விழ நனிமலைசிலைவளைவுசெய்து, அங்கு
அழல்நிறஅம்பதுவானவனே!
ஆண்டாய்! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே!

நிலவொடுவெயில் நிலவிருசுடரும்
உலகமுமுயிர்களுமுண்டொருகால்
கலைதருகுழவியின் உருவினையாய் !
அலைகடலாலிலைவளர்ந்தவனே !
ஆண்டாய் ! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே !

பாரேழுகடலேழுமலையேழுமாய்ச்
சீர்கெழுமிவ்வுலகேழுமெல்லாம்
ஆர்கெழுவயிற்றினில் அடக்கிநின்று, அங்கு
ஓரெழுத்து ஒருருவானவனே !
ஆண்டாய் ! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே !

கார்கெழுகடல்களும்மலைகளுமாய்
ஏர்கெழுமுலகமுமாகிமுத
லார்களுமறிவருநிலையினையாய்ச்
சீர்கெழுநான்மறையானவனே !
ஆண்டாய் ! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே !

உருக்குறுநறுநெய்கொண்டு ஆரழலில்
இருக்குறுமந்தணர்சந்தியின்வாய்
பெருக்கமொடமரர்களமரநல்கும்
இருக்கினிலின்னிசையானவனே !
ஆண்டாய் உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே !

காதல்செய்திளையவர்கலவிதரும்
வேதனைவினையதுவெருவுதலாம்
ஆதலினுனதடியணுகுவன்நான்
போதலர்நெடுமுடிப்புண்ணியனே!
ஆண்டாய்! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே!

சாதலும்பிறத்தலுமென்றிவற்றைக்
காதல்செய்யாதுனகழலடைந்தேன்
ஓதல்செய்நான்மறையாகி
உம்பராதல்செய்மூவுருவானவனே!
ஆண்டாய்! உனைக்காண்பதோர்
அருளெனக்கருளுதியேல்
வேண்டேன்மனைவாழ்க்கையை
விண்ணகர்மேயவனே!

பூமருபொழிலணிவிண்ணகர்மேல்
காமருசீர்க்கலிகன்றிசொன்ன
பாமருதமிழிவைபாடவல்லார்
வாமனனடியிணைமருவுவரே.

---

## திருமங்கை மன்னன் அருளிச்செய்த
## பெரிய திருமொழி, ஆரும்பத்து, இரண்டாந்திருமொழி

பொறுத்தேன்புன்சொல்நெஞ்சில்பொருளின்பமென
[விரண்டும்
இறுத்தேன்ஐம்புலன்கட்கிடனாயின வாயிலொட்டி
அறுத்தேன் ஆர்வச்செற்றமவைதம்மை மனத்தகற்றி
வெறுத்தேன்நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

மறந்தேனுன்னைமுன்னம் மறந்தமதியின்மனத்தால்
இறந்தேனெத்தனையும் அதனாலிடும்பைக்குழியில்
பிறந்தேயெய்த்தொழிந்தேன் பெருமான்! திருமார்பா!
சிறந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர்மேயவனே!

மானேய்நோக்கியர்தம் வயிற்றுக்குழியிலுழைக்கும்
ஊனேராக்கைதன்னை உதவாமையுணர்ந்துணர்ந்து
வானே! மாநிலமே! வந்துவந்தென்மனத்திருந்த
தேனே! நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

பிறிந்தேன்பெற்றமக்கள்பெண்டிரென்றிவர்பின்னுதவா
தறிந்தேன் நீபணிந்தவருளென்னும் ஒள்வாளுருவி
எறிந்தேன் ஐம்புலன்களிடர்தீர எறிந்துவந்து
செறிந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர்மேயவனே!.

பாண்டேன் வண்டறையும் குழலார்கள் பல்லாண்டி
[சைப்ப
ஆண்டார்வையமெல்லாம் அரசாகிமுன்னாண்டவரே
மாண்டாரென்றுவந்தார் அந்தோ! மனைவாழ்க்கைதன்னை
வேண்டேன்நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

கல்லாவைம்புலன்களவை கண்டவாறுசெய்யகில்லேன்
மல்லா! மல்லமருள்மல்லர்மாள மல்லடர்த்த
மல்லா! மல்லலம்சீர் மதிள்நீரிலங்கையழித்த
வில்லா! நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

வேறாயானிரந்தேன் வெகுளாதுமனக்கொளெந்தாய்!
ஆறாவெந்நகரத்து அடியேனையிடக்கருதிக்
கூறாவைவர்வந்து குமைக்கக்குடிவிட்டவரைத்
தேறாதுன்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

தீவாய்வல்வினையார் உடன் நின்று சிறந்தவர்போல்
மேவாவெந்நகரத்து இடவுற்றுவிரைந்துவந்தார்
மூவாவானவர் தம்முதல்வா! மதிகோள்விடுத்த
தேவா! நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

போதார்தாமரையாள் புலவிக்குலவானவர்தம்
கோதா! கோதில்செங்கோல் குடைமன்னரிடைநடந்த
தூதா! தூமொழியாய்! சுடர்போலென்மனத்திருந்த
வேதா! நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!

தேனார்பூம்புறவில் திருவிண்ணகர்மேயவனை
வானாரும்மதிள்சூழ் வயல்மங்கையர்கோன் மருவார்
ஊனார்வேற்கலியன் ஒலிசெய்தமிழ்மாலைவல்லார்
கோனாய். வானவர்தம் கொடிமாநகர் கூடுவரே.

---

## திருமங்கை மன்னன் அருளிச் செய்த
## பெரிய திருமொழி, ஆரும்பத்து, மூன்ருந் திருமொழி

துறப்பேனல்லேன் இன்பம், துறவாதுநின்னுருவம்
மறப்பேனல்லேன் என்றும்மறவாதுயானுலகில்
பிறப்பேனாகவெண்ணேன் பிறவாமைபெற்றதுநின்
திறத்தேனாதன்மையால் திருவிண்ணகரானே!

துறந்தேனார்வச்செற்றச்சுற்றம் துறந்தமையால்
சிறந்தேன்நின்னடிக்கேயடிமை, திருமாலே!
அறந்தானாய்த்திரிவாய்! உன்னையென்மனத்தகத்தே
திறம்பாமற்கொண்டேன் திருவிண்ணகரானே!

மானேய்நோக்குநல்லார் மதிபோல்முகத்துலவும்
ஊனேய்கண்வாளிக்கு உடைந்தோட்டந்துஉன்னடைந்
கோனே! குறுங்குடியுட்குழகா! திருநறையூர்த் [தேன்.
தேனே! வருபுனல்சூழ் திருவிண்ணகரானே!

சாந்தேந்துமென்முலையார் தடந்தோள்புணரின்பவெள்ளத்
தாழ்ந்தேன் அருநரகத்தழுந்தும் பயன்படைத்தேன்
போந்தேன் புண்ணியனே! உன்னையெய்தியென்தீவினைகள்
தீர்ந்தேன் நின்னடைந்தேன் திருவிண்ணகரானே!

மற்றோர்தெய்வமெண்ணேன் உன்னையென்மனத்து வைத்துப்
பெற்றேன் பெற்றதுவும் பிறவாமையெம்பெருமான்!
வற்றாநீள்கடல்சூழ் இலங்கையிராவணனைச்
செற்றாய்! கொற்றவனே! திருவிண்ணகரானே!

மையொண்கருங்கடலும் நிலனும்மணிவரையும்
செய்யசுடரிரண்டும் இவையாயநின்னை நெஞ்சில்
உய்யும்வகையுணர்ந்தேன் உண்மையாலினியாதும்மற்றோர்
தெய்வம்பிறிதறியேன் திருவிண்ணகரானே!

வேறேகூறுவதுண்டு அடியேன்விரித்துரைக்கு
மாறே நீபணியாதடை நின்திருமனத்துக்
கூறேன்நெஞ்சுதன்னால் குணங்கொண்டு மற்றோர்தெய்வம்
தேறேன் உன்னையல்லால் திருவிண்ணகரானே!

முளிந்தீந்தவெங்கடத்து மூரிப்பெருங்களிற்றால்
விளிந்தீந்தமாமரம்போல் வீழ்ந்தாரை நினையாதே
அளிந்தோர்ந்தசிந்தை நின்பாலடியேற்கு வானுலகம்
தெளிந்தேயென்றெய்துவது? திருவிண்ணகரானே!

சொல்லாய்திருமார்வா! உனக்காகித்தொண்டுபட்ட
நல்லேனை வினைகள்நலியாமை நம்புநம்பீ!
மல்லா! குடமாடி! மதுசூதனே! உலகிற்
செல்லாநல்லிசையாய்! திருவிண்ணகரானே!

தாராார்மலர்க்கமலத் தடஞ்சூழ்ந்ததண்புறவில்
சீரார்நெடுமறுகில் திருவிண்ணகரானை
காரார்புயல்தடக்கைக் கலியனொலிமாலை
ஆரிவைவல்லார் அவர்க்குஅல்லல்நில்லாவே.

---

## நம்மாழ்வார் அருளிச்செய்த
## திருவாய்மொழி ஆறும்பத்து, மூன்றுந்திருவாய்மொழி

நல்குரவும்செல்வும் நரகும்சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்ப்
பல்வகையும்பரந்த பெருமானென்னையாள்வானைச்
செல்வம்மல்குகுடித் திருவிண்ணகர்க்கண்டேனே.

கண்டவின்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய்
தண்டமும் தண்மையும் தழலும் நிழலுமாய்
கண்டுகொள்தற்கரிய பெருமானென்னையாள்வானூர்
தெண்டிரைப்புனல்சூழ் திருவிண்ணகர்நன்னகரே.

நகரமும் நாடுகளும் ஞானமும்மூடமுமாய்
நிகரில் சூழ் சுடராயிருளாய் நிலனாய்விசும்பாய்ச்
சிகரமாடங்கள் சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும் புண்ணியமே.

புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவென் றிவையாய்
எண்ணமாய்மறப்பாய் உண்மையாயின் மையாயல்லனாய்த்
திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்
கண்ணனின்னருளே கண்டுகொண்மின்கள்கைதவமே.

கைதவம்செம்மை கருமைவெளுமையுமாய்
மெய்பொய்இளமைமுதுமை புதுமைபழமையுமாய்ச்
செய்ததிண்மதில்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடைமூவுலகே.

மூவுலகங்களுமாயல்லனாய் உகப்பாய்முனிவாய்
பூவில்வாழ்மகளாய்த்தவ்வையாய் புகழாய்ப்பழியாய்த்
தேவர்மேவித்தொழும் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்
பாவியேன்மனத்தே உறைகின்றபரஞ்சுடரே.

பரஞ்சுடருடம்பாய் அழுக்குப்பதித்தவுடம்பாய்க் [ணோர்
கரந்தும்தோன்றியும்நின்றும் கைதவங்கள்செய்துபவிண்
சிரங்களால்வணங்கும் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
வரங்கொள்பாதமல்லாலில்லை யாவர்க்கும்வன்சரணே.

வன்சரண்சுரர்க்காய் அசுரர்க்குவெங்கூற்றமுமாய்த்
தன்சரண் நிழற்கீழ் உலகம்வைத்தும் வையாதும்
தென்சரண்திசைக்குத் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்
என்சரணென்கண்ணன் என்னையாளுடையென்னப்பனே.

என்னப்பனெனக்காயிகுளாய் என்னைப்பெற்றவளாய்ப்
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்ச்சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன்தனதாள் நிழலே.

நிழல்வெய்யில்சிறுமைபெருமை குறுமைநெடுமையுமாய்ச்
சுழல்வன நிற்பன மற்றுமாயவையல்லனுமாய்
மழலைவாய்வண்டுவாழ் திருவிண்ணகர்மன்னுபிரான்
கழல்களன்றி மற்றோர்களை கணிலம்காண்மின்களே.

காண்மின்களுலகீர்! என்று கண்முகப்பேநிமிர்ந்த
தாளிணையன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்
கோணையின்றிவிண்ணோர்க்கும் என்றுமாவர்குரவர்களே.

---

## திருமங்கை மன்னன் அருளிச்செய்த
## பெரிய திருமொழி 10ம் பத்து. 1ம் திருமொழி 8வது பாசுரம்

பத்தராவியைப் பான்மதியை அணித்
தொத்தை மாலிருஞ்சோலைத் தொழுதுபோய்
முத்தினைமணியை மணிமாணிக்க
வித்தினைச் சென்றுவிண்ணகர்க்காண்டுமே.

---



கோபுரவாசல் முன்தோற்றம்.

## திருமங்கை மன்னன் அருளிச்செய்த திருநெடுந்தாண்டகம் 29-வது பாசுரம்

அன்றாயர்குலமகளுக்கரையன் தன்னை
அலைகடலைக்கடைந்தடைத்தவம்மான் தன்னை
குன்றாதவலியரக்கர்கோனைமாளக்
கொடுஞ்சிலைவாய்ச்சரந்துரந்துகுலங்களைந்து
வென்றானைக் குன்றெடுத்ததோளினானை
விரிதிரைநீர்விண்ணகரம்மருவிநாளும்
நின்றானைத் தண்குடந்தைக்கிடந்தமாலை
நெடியானையடிநாயேன்நினைந்திட்டேனே.

---

## திருமங்கை மன்னன் அருளிச்செய்த சிறிய திருமடல்

காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்

---

## திருமங்கைமன்னன் அருளிச் செய்த பெரிய திருமடல்

அர்ச்சாவதாரங்களில் ஈடுபடும்போது முதலில் திருவிண்ணகரப்பனை அநுபவித்துப் பிறகு மற்ற எம்பெருமான்களை அநுபவிக்கிறார்.

.........தாமரைமேல்
மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன்மலையை

---

## பொய்கையாழ்வார் அருளிச் செய்த முதற்றிருவந்தாதி 77-வது பாசுரம்

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும்—நான்கிடத்தும்
நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமா மிடர்.

---

## பேயாழ்வார் அருளிச்செய்த
## மூன்றாந்திருவந்தாதி 61, 62-பாசுரங்கள்

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரு நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் தன்விண் ணகர்.

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாட வேளுக்கை — மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு.

இந்நூலைத் தொகுத்தெழுதிய
மன்னார்குடி, தேசீய உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியன்:
ப. இராமநாதபிள்ளை அவர்களால்
பாடப்பெற்ற கீர்த்தனை.

ராகம் நாட்டக்குறிஞ்சி.

தாளம் - த்ரிபுட

பல்லவி.

காராய வண்ணன் தன்னை
கையால் தொழுதிடுவோம்

அனுபல்லவி.

ஓராதவரும் ஓர்கால் - ஒப்பிலியப்பா என்ன
தாராத வாழ்வு தன்னை—தப்பாமலே யளிக்கும்

சரணம்.

சீராய காவேரித் தென்கரையில் திகழும்
பாராய துண்ட பெரும் பவளவாய்ப் பரந்தாமா
நாராயணாய நம என்றே நாம் நாள்தோறும்
பாராயணஞ் செய்தால் பரகதியுங்கிடைக்கும். (காராய)

ஒப்பிலியப்பன் உத்ஸவப் பெருமாள்

**போட்டோ காப்பி 1-க்கு ரூ. 1—0—0**

(தேவஸ்தான ஆபீஸில் கிடைக்கும்.)

NATIONAL PRESS
PRINTERS & BINDERS
KUMBAKONAM